
ABOUT DIFFERENT ~~ITEMS OF~~ INSTRUMENTS.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ITEM – | A | ⑨ MattāLam | ⑩ Nātasvaram | ⑪ Ottu | ⑫ Jālarā | |
| ITEM – | B | ① TappaTTai | ② TiTumam | ③ MoTāmattāLam | ④ Kompu | ⑤ Pullāṅkuṟal |
| ITEM – | C | ⑥ Pampai | ⑦ Urumai | ⑧ UTukkai | | |
| ITEM – | D | ⑬ Caṅku | ⑭ JeyakaNTi | | | |
| ITEM | E | ⑯ KuTu KuTukkai | ⑰ Kinnāram | | | |
| | | | | | | |

## ① தப்பட்டை (பலகை)





Tappattai (Palakai)

தப்பட்டையின் வட்ட வடிவமான வடிவத்தை வேப்பமரத்தின் வேரால் (Margosatree root) செய்யப்படுகிறது.

இதற்கு உபயோகிப்பது எருமைக்கன்றுவின் தோல்.

தப்பட்டையை இடதுபக்கம் தோளில் மாட்டிக் கொண்டு, A குச்சியை வலதுகையிலும், B குச்சியை இடதுகையிலும் பிடித்து அடித்துக் கொண்டு இசைப்பார்கள்.

## ② திடுமம்





TiTumam.

இதன் உருவத்தை செம்புத்தகடு or மண் ஆகியவற்றில் செய்யப்படுகிறது.

இதற்கு உபயோகிக்கும் தோல் எருமைக் கன்றுவின் தோல்தான்.

இதை கழுத்தில் போட்டுக்கொண்டு A குச்சியை இடதுகையால் பிடித்து, B குச்சியை வலதுகையால் பிடித்து இரண்டு குச்சியாலும் மாறிமாறியடித்து திடும்.. திடும்.. என்ற ஓசையை எழுப்புவார்கள்.

## ③ மொடாமத்தாளம்





MoTamattaLam.

இந்த மத்தாளத்தின் உருவத்தை மண்ணில் செய்யப்படுகிறது. இதன் இரண்டு முனைகளுக்கும் எருமைக் கன்றுவின் தோல்தான் உபயோகிக்கப்படுகிறது. ~~இதை~~ இடுப்பில் கட்டிக்கொண்டு இரண்டு கைகளாலும் அடிப்பார்கள். A பக்கத்தில் இடதுகையாலும், B பக்கத்தை வலதுகையாலும் அடிப்பார்கள். A முனையை விட B முனை கொஞ்சம் பெரியதாக இருக்கும்.

A முனையை "கண்" பக்கம் என்றும், B முனையை "டொப்பி" பக்கம் என்று கூறுகிறார்கள்.

(A முனையை பெண் முனை என்றும், B முனையை ஆண் முனை என்றும் கூறுகிறார்கள்)

## ④ கொம்பு




Kompu.

இதை செம்பு, பித்தளைத் தகடுகளால் செய்யப்படுகிறது.

இதன் A முனையில் வாய் வைத்து ஊதினால் B முனை வழியாக இசைச் சத்தம் வெளியில் வரும்.

## ⑤ புல்லாங்குழல்





PullankuRal.

இதை மூங்கில், நாணல் போன்றவைகளின் குழலால் செய்யப்படுகிறது.

இதன் A பகுதி ஓட்டையை வாயில் வைத்து ஊதுவார்கள். B பகுதி வழியாக சத்தம் வரும். நடுப்பகுதியில் உள்ள 4 ஓட்டைகளும் பாடல்களுக்கு தகுந்தவாறு இசைப்பதற்கு உபயோகப்படுத்துவார்கள்.

## பம்பை

(6)





Pampai.

No 1 ன் உருவம் வெண்கலத்தால் (வெங்கலம்) செய்யப்படுகிறது.
No 2 ன் உருவம் வேம்பு, வேங்கை, பலா, மாமரம் போன்ற மரங்களால் செய்யலாம்.
(மேற்கூறிய மரங்களில் ஏதோ ஒரு மரத்திலேயே செய்யலாம்)
A, B, C, D ஆகிய நான்கு முனைகளுக்கும் ஆட்டுத்தோல் தான் உபயோகிக்கப்படுகிறது.
இவைகளில் No 1 ஆண் என்றும், 2 பெண் என்றும் கூறுகிறார்கள். இதை இடதுபக்கதோளில் போட்டுக் கொண்டு A, C முனைகளை கைகளாலும், B, D ஆகிய முனைகளை குச்சியாலும் அடிப்பார்கள். இதை அடிப்பதற்கு உபயோகிக்கும் குச்சி அரளிக்குச்சி.

## உருமி

(7)





Urumai

இதன் உருவம் வேம்பு, வேங்கை, மாவிலங்க? (மாதிலிங்க?) மரம், பலா போன்ற மரங்களில் ஏதோ ஒன்றிலே செய்யலாம்.
இதன் A முனைக்கு மாட்டின் சவ்வு மெல்லிய தோல் (thin skin or membrane) உபயோகிப்பார்கள். B முனைக்கு மாட்டுக்கன்று அல்லது எருமைக்கன்றின் தோல் போடுவார்கள்.
A பக்கத்தில் (இடது கையால்) குச்சியால் உரசிக் கொண்டு (to rub) B பக்கத்தில் வலது கையால் அடிப்பார்கள்.
A முனை பெண் முனை என்றும் B முனை ஆண் என்றும் கூறுகிறார்கள். A முனைபக்கம் உரசுவதற்கு அரளிக்குச்சி உபயோகிக்கிறார்கள்.

## உடுக்கை

(8)





UTukkai

இதை வெண்கலத்திலே செய்வார்கள் அல்லது வேங்கை வேம்பு, பலா, மாவிலிங்க ஆகிய மரங்களாலும் செய்வார்கள். இதன் A முனைக்கு ~~ஆட்டு~~ குடல் சவ்வும் (மெல்லியதோல்) ~~B முனைக்கு ஆட்டுச்~~ சவ்வும் உபயோகிப்பார்கள்.
இதை இடதுகையில் பிடித்துக்கொண்டு வலது கையால் B முனையால் மட்டும் அதற்கு இசை எழுப்புவார்கள்.
A முனையில் குதிரைவால் மயிர் கட்டப்பட்டிருக்கும். அதை நீங்கள் இப்படத்தில் — இம்மாதிரி இருப்பதைக் காணலாம்.

## மத்தாளம் (தவுல்)

(9)





MattaLam (tavul)

இதன் உருவத்தை வேம்பு, வேங்கை, பலா போன்ற மரங்களால் செய்யப்படுகிறது. மேலும் தாழைமரக் கிழங்கிலேயும் செய்யலாம்.
இதன் A முனைக்கு மாடு அல்லது எருமைக்கன்றுத்தோல் உபயோகிக்கலாம். B முனைக்கு ஆட்டுத்தோல் உபயோகிக்கலாம்.
இதன் A முனையில் குச்சியிலே இடதுகையில் அடிப்பார்கள். B முனையில் வலதுகையால் அடிப்பார்கள்.
வலதுகையில் பெருவிரல்தவிர மற்ற நான்கு விரல்களிலும் துணியால் செய்யப்பட்ட "சொருகி" என்பவைகளை போட்டுக் கொள்வார்கள்.
A முனை "கண்" (பெண்) B முனை "டொப்பி" (ஆண்) என்று சொல்கிறார்கள்.

## நாதஸ்வரம்.


(10)




Natasvaram.

இதை என்னமரத்திலே செய்வது என்பதற்கு விபரம் கிடைக்கவில்லை.
நாதசுரத்தை ஊதுவதற்கு பயன்படுத்தும் "சீவாளி"யை நாணல்தண்டிலே (Kusagrass) செய்யப்படுவது. இந்த சீவாளி என்பதை நாதஸ்வரத்தின் நுனியால் பொருத்தி வாயில் வைத்து ஊதுவார்கள்.
சீவாளியை சுத்தம் செய்வதற்காக உபயோகிக்கும் குச்சி யானைத்தந்தத்திலே செய்யப்படுவது.


## ஒத்து. (11)




Ottu

இதை எந்த மரத்தில் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை.
இதற்கு உபயோகிக்கும் சீவாளி நாணல் தண்டில் செய்யப்படுகிறது.
இக்கருவி ஒரே விதமான சத்தத்தை மட்டும் உண்டாக்கும்.


## ஜாலரா. (12)




Jālarā.

இதை வெண்கலத்தால் செய்யப்படுகிறது. A பகுதியை இடது கையாலும் B பகுதியை வலது கையாலும் பிடித்து ஒன்றுடன் ஒன்றை சேர்த்து அடிப்பார்கள்.


## சங்கு. (13)




Canku

இது கடலில் உற்பத்தியாவது.
இதன் A முனையில் ~~வாய்~~ வாய்வைத்து ஊதினால், B பகுதியால் சத்தம் வெளியே வரும்.


## ஜெயகண்டி. (14)



JeyakaNTi.

இதை வெண்கலத்தால் செய்யப்படுகிறது. இதில் கட்டியுள்ள கயிற்றில் இடது கை பெருவிரலைக் கோர்த்து பிடித்துக்கொண்டு மற்ற விரல்களில் குச்சியைப் பிடித்து அடிப்பார்கள். அல்லது, இடதுகையால் பிடித்துக் கொண்டு வலதுகையால் குச்சியைப் பிடித்து அடிக்கலாம்.

## (15) மிருதங்கம்.




Mirutankam.

இதை வேங்கை, வேம்பு, பலா போன்ற மரங்களில் செய்யலாம்.
இதன் B முனைக்கு ஆட்டுத்தோல் போட வேண்டும். அதன் மத்தியில் கறுப்பு நிறமாய் இருப்பது கோதுமை மாவினால் வைக்கப்படுவதாக கூறுகிறார்கள். இதை "ரவை" என்று சொல்வார்கள். இதை வைப்பதினால் அந்த முனையால் ஒரு தனிப்பட்ட சத்தம் உண்டாகிறது.
A முனைக்கு மாடு அல்லது எருமைக்கன்றின் தோல் போடப்படும். (ஆட்டுத்தோலும் போடலாம்)
இதன் B முனையை இடது கையாலும், A முனையை வலது கையாலும் அடிப்பார்கள்.
B முனையை இண பக்கம் or (பெண் முனை)
A முனையை டெவப பக்கம் or (ஆண் முனை) என்று சொல்கிறார்கள்.


## (16) குடுகுடுப்பை.




KuTu KuTuppai

இது எதனால் செய்யப்படுகிறது என்பது தெரியவில்லை, என்ன தோல் உபயோகிக்கிறார்கள் என்பதுவும் தெரியவில்லை.
இதற்கு போடப்பட்டுள்ள சுணிக் கயிற்றை வலது கையால் பிடித்துக் கொண்டு ஆட்டுகிறார்கள். அப்பொழுது அதன் மத்தியில் ஒரு கயிற்றில் சிறிய உருண்டை மாதிரி இருக்கும் பொருள் கருவியின் இரண்டு பக்கமும் மாறி மாறி அடித்து சத்தம் உண்டாக்குகிறது.

## (17) கின்னரம்.




Kinnaram.

இதை மூங்கில், சுரைக்காய் (Punkin), இரும்பு, உருக்கு கம்பிகள் ஆகியவைகளால் செய்யப்படுகிறது.
A = மூங்கில்
B = சுரைக்காய் (Pumpkin skin)
C = இரும்புக் கம்பிகள் (மெல்லிய கம்பிகள்)
இக்கருவியை வலது கையால் பிடித்துக் கொண்டு வலது கையின் ஆள்காட்டி விரலால் அக்கம்பியை சுண்டிவிட்டு இசைப்பார்கள்.
ஆள்காட்டி விரல் = forefinger.